**லிற்ரோ காஸ் ரேர்மினல் லங்கா லிமிட்டட் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

லிற்ரோ காஸ் ரேர்மினல் லங்கா லிமிட்டட்டின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பன உள்ளடங்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் (கணக்காய்வு நோக்கெல்லை)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எல்கேஏஎஸ் - 16 இன் 51 ஆம் பிரிவின் பிரகாரம், ஒரு சொத்தின் இற்றைப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பன குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டியதுடன் எதிர்பார்ப்புக்கள் முந்தைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபட்டால், எல்கேஏஎஸ் - 8 இன் பிரகாரம் மாற்றங்கள் கணக்கீட்டு மதிப்பீட்டில் உள்ள மாற்றமாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட ரூபா 8.56 மில்லியன் தொகையான சொத்துக்கள் அதற்கிணங்க மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் PPE மூலதனமாக்கல் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 507(2). | ஒவ்வொரு நிலையான சொத்தின் உண்மையான இருக்கும் தன்மை திசெம்பர் 31 இல் சரிபார்க்கப்பட்டு அதன் நிலைமை குறிப்பிடப்பட வேண்டும். ஆனால் கம்பனி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்து மெய்மையாய்வு அல்லது பொருள் மெய்மையாய்வு எதையும் நடாத்தியிருக்கவில்லை. | SLIC மேற்கொண்ட கோரிக்கையின் அடிப்படையில் கம்பனி 2022 யூன் மாதத்தில் விசேட நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு ஒன்றை நடாத்தியது. எனவே கம்பனி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்து மெய்மையாய்வை நடாத்தியிருக்கவில்லை . | நிதிப்பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 01/2015 ஆம் இலக்க, 2022 சனவரி 14 ஆம் திகதிய 01/2015(ii) ஆம் இலக்க மற்றும் 2020 சனவரி 27 ஆம் திகதிய பிஈடி 01/2020 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் மாதாந்தம் 135 மற்றும் 115 லீற்றருக்கு சமமான எரிபொருள் படி அல்லது ரூபா 50,000 மாதாந்த எரிபொருள் படி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட HM 1-1 வகை அல்லது அதற்கு மேற்பட்ட எந்தவொரு SOE அல்லது அதற்கு மேற்பட்ட பதவியில் உள்ள உத்தியோகத்தரிற்கு உரித்துள்ளது. எனினும் சுற்றறிக்கைகளுக்கு முரணாக,<br>(i) உத்தியோகபூர்வ வாகனம் அல்லது ரூபா 5.7 மில்லியன் கூட்டுமொத்தமான மாதாந்த படி என்பன உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்தில்லாத 11 | இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள படிகள் லிற்ரோ காஸ் ரேர்மினல் லங்கா லிமிட்டட் துணைக்கம்பனியின் கீழ் வருவதால் அதற்குப் பொருந்தாது. தலைவர், CEO, பணிப்பாளர் சபை ஆகியோருக்கான படிகளின் கொடுப்பனவுகள் போட்டி சந்தை விலைவிகிதங்களைக் கருத்தில் கொண்டு உரிய சபையால் தீர்மானிக்கப்படும். அதன் பிரகாரமும், பிஈடி 01/2015 இற்குப் பதிலாக கம்பனியின் அமைப்பு அகவிதியின் பிரகாரமும், பொதுமுயற்சிகள் | தாய்க் கம்பனியால் அறிவுறுத்தப் பட்டவாறு பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.<br><br>(ii) கம்பனி ஆறு ஊழியர்களுக்கு ரூபா 143,000 முதல் ரூபா 300,300 வரை மாதாந்த வாகன படியையும், 200 லீற்றர் முதல் 320 லீற்றர் வரை மாதாந்த எரிபொருள் படியையும் வழங்கியிருந்தது. | திணைக்களத்தின் பிரதிநிதியை உள்ளடக்கிய சபையால் அங்கீகரிக்கப்பட்ட கார் கொள்கையைப் பின்பற்றியது. | |
| (இ) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 01/2015 ஆம் இலக்க மற்றும் 2020 சனவரி 27 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை | (i) உத்தியோகத்தர் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளை வகித்திருந்தால், அந்த நபர் தனது முக்கிய பதவிக்கு பரிந்துரைக்கப்பட்ட எரிபொருள் படியை மாத்திரமே பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராவார். எனினும், இரண்டு கம்பனிகளின் தலைவர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிகளை வகித்த முன்னாள் தலைவர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் லிற்ரோ காஸ் லங்கா லிமிட்டட்டிடமிருந்து பெறப்பட்ட படிக்கு மேலதிகமாக 2022 மே வரை கம்பனியிடமிருந்து ரூபா 443,300 மாதாந்த வாகன படியைப் பெற்றுள்ளனர். மேலும் இந்த தொகை சுற்றறிக்கையால் அனுமதிக்கப்பட்ட ரூபா 50,000 மாதாந்த படி வரம்பை விஞ்சியுள்ளது. சுற்றறிக்கையின் பிரகாரம் 150 லீற்றரை விஞ்சி 500 லீற்றர் மாதாந்த எரிபொருள் படி முன்னாள் தலைவர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரிற்கு வழங்கப்பட்டிருந்தது.<br><br>(ii) 2022 மே வரை கம்பனியின் முன்னாள் தலைவர்/ CEO இற்கு ரூபா 50,000 மாதாந்த சாரதி படி மற்றும் ரூபா 150,000 மாதாந்த உபசரணைப் படி செலுத்தப்பட்டுள்ளது.<br><br>(iii) நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளரிற்கு (NED) | தலைவர், நிறைவேற்று மற்றும் நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு படிகளை செலுத்துதல் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குதல் என்பன விஞ்ஞாபனம் மற்றும் அமைப்பு அகவிதி உருப்படி இல. 83, 76, 77 மற்றும் 78 இன் பிரகாரம் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்படுகின்றன. | தாய்க் கம்பனியால் அறிவுறுத்தப் பட்டவாறு பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பங்குபற்றல் படி மாத்திரமே உரித்துடையதாக இருந்த போதிலும் மூன்று நேனுள இற்கு ரூபா 100,000 மாதாந்த வாகனப் படி செலுத்தப்பட்டது. | | |
| (ஈ) | 2022 திசெம்பர் 21 ஆம் திகதிய பிஈடி 09/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 2021 நிதியாண்டில் இலாபம் ஈட்டிய மற்றும் ஊக்குலிப்பு படிகளை செலுத்திய வணிக கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகள், ஒரு ஊழியரிற்கு ரூபா 20,000 படி மிகையூதியத்தை முன்மொழியலாம். எனினும், மீளாய்வாண்டில் கம்பனி ஒரு ஊழியருக்கு ரூபா 60,000 படி மிகையூதியத்தை செலுத்தியிருந்தது. | சிபிஏ அல்லாத ஊழியர்களின் வருடாந்த செயலாற்றல் அடிப்படையிலான மிகையூதியம் தனிப்பட்ட செயலாற்றல் மற்றும் கம்பனியின் செயலாற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. மிகையூதியம் கொடுப்பனவு செய்யும் மாதங்களின் எண்ணிக்கை CBA ஊழியரின் கொடுப்பனவிற்கு ஏற்ப இருக்க வேண்டும். மேலும் PED சுற்றறிக்கைகளின் பொருந்தக்கூடிய தன்மை மற்றும் ஏற்றுக்கொள்ளும் தன்மை என்பன கம்பனியின் பணிப்பாளர் சபையால் தீர்மானிக்கப்படுகிறது. | கம்பனி சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களை கடைபிடிக்க வேண்டும். ஏதேனும் விலகல்கள் தேவைப்பட்டால், பொது திறைசேரியீன் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். கம்பனி சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களை கடைபிடிக்க வேண்டும். ஏதேனும் விலகல்கள் தேவைப்பட்டால், பொது திறைசேரியீன் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (உ) | 2014 ஆகஸ்ட் 08 இல் சபையால் நிறைவேற்றப்பட்ட 2014 இன் 04 ஆம் இலக்க சுற்றறிக்கைத் தீர்மானம் | தீர்மானத்தின் பிரகாரம் 2011 இன் 3 ஆம் இலக்க காப்புறுதித் தொழில் ஒழுங்குமுறை (திருத்தம்) சட்டத்தின் பிரகாரம் ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோர்ப்பரேஷன் லிமிட்டட்டைப் பிரிப்பதற்காக, ஸ்ரீ லங்கா இன்வெஸ்ட்மென்ட் ஹோல்டிங்ஸ் லிமிட்டட்டிற்கு (SLIHL) ரூபா 100 மில்லியன் வட்டியில்லா முற்பணம மாற்றப்பட்டிருந்தது. இந்தத் தொகையானது காசாகவோ அல்லது பங்கிலாப தீர்வின் மூலமாகவோ 2015 ஆகஸ்ட் 31 இல் அல்லது அதற்கு முன்னர் | 2022/5/20 இல் நடைபெற்ற COPE கூட்டத்தில் இது கலந்துரையாடப்பட்டிருந்ததுடன் SLIC கலைப்புச் செயல்பாட்டில் உள்ளது என்பதை SLIC இன் CEO உறுதிப்படுத்தினார், மேலும் கலைப்பு செயன்முறை பூர்த்தியடைந்ததும் இந்த தொகை SLIC இற்கு மாற்றப்படும். | SLIHL இலிருந்து நிலுவைகளை அறவிடுவதற்கு கம்பனி தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

SLIHL ஆல் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். SLIHL கூட்டிணைக்கப்பட்ட போது கம்பனியின் அப்போதைய தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர், தலா ஒரு சாதாரண பங்கைக் கொண்ட ஆரம்ப பங்குதாரர்களாக மேற்கூறிய இரண்டு ஆரம்ப பங்குகளும் இயன்றவரை நடைமுறையில் பொது திறைசேரி செயலாளருக்கு மாற்றப்படும் என்ற புரிதலின் அடிப்படையில் இனங்காணப்பட்டார்கள். எனினும், இந்த முற்பணம் இன்றுவரை SLIHL ஆல் திருப்பிச் செலுத்தப்பட்டிருக்காததுடன் அத்தகைய முற்பணத்தைத் தீர்ப்பதில் கம்பனிக்கும் SLIHL இறகும் இடையில் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், கம்பனிப் பதிவாளரின் ஏடுகளின் பிரகாரம் SLIHL இன் மொத்த இரண்டு பங்குகளும் இன்னும் பொது திறைசேரிக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவு

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 1159.6 மில்லியன் இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1200.8 மில்லியன் தொகையானதால் நிதிசார் விளைவுகளில் ரூபா 41.2 மில்லியன் தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம் ரூபா 172 மில்லியனால் குறைவடைந்தமை மற்றும் மீளாய்வாண்டிற்கான நிர்வாக செலவினங்கள் ரூபா 96 மில்லியனால் அதிகரித்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கான காரணங்களாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய இரண்டு (02) ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவினங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் பின்வருமாறுள்ளது.

| | தொகை ரூபா. மிலிலியன் | | | மாற்றத்தின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2022 | 2021 | 2020 | % 2022 | % 2021 | % 2020 |
| வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான | 1,444 | 1,616 | 1,508 | -10.6 | 7 | -27 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வருமானம் | | | | | | |
| விற்பனை கிரயம் | 319 | 316 | 327 | 1 | -3 | 4 |
| நிதி வருமானம் | 520 | 304 | 517 | 71 | -41 | -26 |
| நிதி செவினங்கள் | 17 | 28 | 83 | -38.5 | -66 | -38 |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

முந்தைய (02) ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது முக்கிய விகிதங்கள் பின்வருமாறுள்ளன.

| ஆண்டு | **2022** | **2021** | **2020** |
|---|---|---|---|
| **விகிதம்** | | | |
| **இலாபத்தன்மை விகிதம்** | | | |
| தேறியலாப விகிதம் | 80% | 76.04% | 95.19% |
| **திரவத்தன்மை விகிதம்** | | | |
| நடைமுறை விகிதம் | 1.14 | 4.81 | 13.15 |
| விரைவு விகிதம் | 1.13 | 4.8 | 13.12 |
| **இணைவு விகிதம்** | | | |
| ஈடுபடுத்திய மூலதனம் மீதான வருவாய் (ROCE) | 9.6% | 9.6% | 12.27% |
| உரிமை மீதான திரும்பல் | 4.7% | 8.99% | 9.61% |
| மூலதனத்திற்கான கடன் விகிதம் | 0.13 | 0.11 | 0.14 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 10 வருட காலத்திற்கு அம்பாந்தோட்டை செயற்பாட்டு நிலையத்தில் LPG ஐ இறக்குமதி செய்தல், களஞ்சியப்படுத்துதல், கையாளுதல் மற்றும் விநியோகம் செய்தல் நோக்கத்திற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் கம்பனி 2013 நவம்பர் 20 இல் குத்தகை உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தது, பின்னர் அது அம்பாந்தோட்டை இன்டர்நேஷனல் போர்ட் குரூப் (பிறைவேட்) லிமிட்டட்டுடன் 2017 திசெம்பர் 08 இல் புதுப்பிக்கப்பட்டிருந்தது. 8 | லிற்ரோ காஸ் ரேர்மினல் லங்கா லிமிட்டட், சேதமடைந்த குழாய் வழியாக LPG ஐ வெளியேற்றுவதை மாத்திரம் நிறுத்தி வைக்குமாறு கோரப்பட்டிருந்தது, ஆனால் நாங்கள் சில LPG கையிருப்புக்களை கொண்டிருந்த களஞ்சிய வசதியின் எஞ்சிய பகுதிகள் இயக்கப்படவில்லை. | பொது மக்களுக்கு சேவை செய்யும் கம்பனியின் நோக்கத்திற்காக இந்த ஆதனத்தை பயன்படுத்துவதற்கு கம்பனி தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆண்டுகளுக்கான ரூபா 668.55 மில்லியன் (வரி உட்பட) தொகையான குத்தகை வாடகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மீதமுள்ள இரண்டு ஆண்டுகளுக்கான ரூபா 233.84 மில்லியன் (வரி தவிர்த்து) தொகையான குத்தகை வாடகை 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டும். 2013 நவம்பர் 20 முதல் 2021 திசெம்பர் 31 வரை 10,075 MT, LPG மொத்த அளவுடன் 6 ஏற்றுமதிகள் மாத்திரமே அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. எனவே, 2,700 MT களஞ்சியத் திறன் கொண்ட குறித்த வசதி கணிசமான தொகை குத்தகை வாடகையாக செலுத்தப்படுகின்ற போதிலும் கிரய நலன்களின் நன்மைகளை பகுப்பாய்வு செய்யும் கம்பனியால் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>எனினும், குழாய்களில் ஏற்பட்ட கசிவு காரணமாக 2021 பெப்ரவரி 11 முதல் ரேர்மினலின் செயற்பாடு இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், முனையத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு, அதே பணியாளர்கள் மீளாய்வாண்டுக்கான சம்பளத்திற்காக ரூபா 12.9 மில்லியன் செலவிட்டு முனையத்தில் தங்க வைக்கப்பட்டனர். | எனவே, பைப்லைன் பழுதுபார்ப்பு /மாற்றல் ஆகியவற்றில் இணக்கமான தீர்வு எட்டப்படும் வரை, சொத்துக்களின் ஒருமைப்பாட்டை பேணுவதற்கும், வசதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் எங்களுக்கு ஒப்பந்தக் கடப்பாடு இருந்தது.<br><br>எனவே, HIPG உடன் சட்ட ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்க பேச்சுவார்த்தை நடாத்தும் போது, 2022 ஆம் ஆண்டில் வசதியின் ஆபத்தின்மை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக, வழக்கமான பராமரிப்பு/நியதிச்சட்ட பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்கு குறைந்தபட்ச பதவியணியினரை நாங்கள் பேண வேண்டியிருந்தது. 2022 ஆம் ஆண்டில் மேற்படி தேவைப்பாடுகளுக்கு சுட்டிக்காட்டப்பட்ட செலவினங்கள் பங்களித்திருந்தன. | |

**3.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ''லிற்ரோ ஒக்சிஜன்'' என்ற புதிய தயாரிப்பு வகையை நிறுவுவதற்கும், கெரவலப்பிட்டியவில் சுமார் 22 ஏக்கர் காணி மற்றும் கட்டிடத்தை LGTLL ஆல் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அரசாங்க மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 500 மில்லியன் முற்பணமாக செலுத்தி உடனடியாக கொள்வனவு செய்வதற்கு/ 50 ஆண்டுகள் நீண்ட கால குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கும் ஒக்ஸிஜன் நிரப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கு மற்றும்/ அல்லது மேலதிக LPG செயற்பாடுகள் மற்றும் களஞ்சிய விரிவாக்க செயற்திட்டமாக | கம்பனியின் பொருளாதார நிலைமை சீராகும் வரை, மிகுதித் தொகையை செலுத்துவதற்கு குறைந்தபட்சம் 4 ஆண்டுகள் தாமதப்படுத்துவதற்கு கம்பனிக்கு ஆதரவளிப்பதற்கு நிதி அமைச்சின் தலையீட்டை கம்பனி கோரியுள்ளது. மேலும் அதே காணியை மூன்றாம் தரப்பினருக்கு வழங்குவது, 2022/5/27 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் அமைச்சரவையின் தீர்மானத்திற்கு முரணானது | கம்பனி இந்த ஆதனத்தை உத்தேசித்த நோக்கத்திற்காக அல்லது தொடர்புடைய அதிகாரிகளின் அங்கீகாரத்துடன் வேறு ஏதேனும் பொருத்தமான நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும். |

அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய நடவடிக்கைகளாகப் பயன்படுத்த இந்தக காணியை பயன்படுத்துவதற்கும் 2021 மே 24 இல் நடைபெற்ற கூட்டத்தில் பணிப்பாளர் சபை அங்கீகரித்திருந்தது. அதன் பிரகாரம் ரூபா 500 மில்லியன் காணிக்கான முற்பணமாக 2021 மே 31 இல் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், குறித்த காணியில் ஒக்ஸிஜன் நிரப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரம் சபையிடமிருந்து பெறப்பட்டிருக்காததுடன் குறித்த காணியைப் பயன்படுத்துவதற்கான எதிர்காலத் திட்டம் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் 2023 சனவரி 03 இல் தலைவருக்கு மொத்த குத்தகை தவணைப்பணத்தை 01 மாத காலத்திற்குள் செலுத்துமாறும் இல்லை என்றால் அந்த காணி மற்றுமொரு முதலீட்டிற்காக ஒதுக்கப்படும் என அறிவித்திருந்தது. எனினும் கம்பனி குறித்த குத்தகை தவணைப்பணத்தை அந்தக் காலப்பகுதியினுள் செலுத்தியிருக்கவில்லை.

என்று LGTLL ஆனது SLLDC இற்குத் தெரிவித்துள்ளது. SLLDC இன் முன்மொழிவின் பிரகாரம் கம்பனி முழுக் கொடுப்பனவையும் ஒரே நேரத்தில் செலுத்தும் நிலையில் இல்லை என்று SLLDC இற்கு கம்பனி தெரிவித்திருந்தது. மேலும் இரு தரப்பினராலும் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்ட ஆர்வத்துடன் 24 மாதங்களுக்குள் மாதாந்த தவணைகளில் மொத்த கொடுப்பனவை செலுத்துவதற்கான எதிர் முன்மொழிவை சமர்ப்பித்துள்ளது. தற்போது காணியை குத்தகைக்கு எடுப்பதற்கு இரு தரப்பினரும் ஒப்புக் கொள்ளும் கொடுப்பனவுத் திட்டத்தை இறுதி செய்வதற்கான பேச்சுவார்த்தையில் உள்ளோம்.

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகை வழிகாட்டலின் 4.2.1 (ஆ) மற்றும் (உ) வழிகாட்டலில் குறிபிடப்பட்டவாறு குறைந்தபட்சம் 3 வருட காலத்திற்கு எதிர்பார்க்கப்படும் பெறுகை நடவடிக்கைகள் பெறுகைத் திட்டத்தில் பட்டியலிடப்பட்டிருக்காததுடன் பிரதான பெறுகைத் திட்டம் 6 மாதங்களை விஞ்சாமல் ஒரு காலப்பகுதியினுள் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை வழங்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் 4.2.2 (அ) வழிகாட்டலின் பிரகாரம் பெறுகை தொடங்கும் காலம் முதல் முடிவடையும் வரை ஒவ்வொரு பெறுகை நடவடிக்கையின் படிகளையும் விவரிக்கும் காலவரிசைப்படி பெறுகைக் கால அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும். ஆனால், அதன் பிரகாரம் கம்பனி தயாரித்திருக்ககவில்லை. | முகாமைத்துவ கருத்துரை வழங்கப்படவில்லை. | -மேற்படி- |

## 4. கணக்களிப் பெறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நி.பி. 134(1) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பிரிவு நிதி மற்றும் கணக்கீட்டு செயற்பாடுகளுக்கு பொறுப்பானவர்கள் அல்லது உண்மையில் செயற்படுத்துபவர்களின் கட்டுப்பாட்டிலிருந்து சுயாதீனமாக இருக்க வேண்டும். திகதிய 01/2021 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை மூலம் 2021 நவம்பர் 16 இல் வெளியிடப்பட்ட அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களிற்கான கூட்டிணைந்த ஆளுகை தொடர்பான வழிகாட்டலின் 4.4 ஆம் பிரிவு உள்ளக கணக்காய்வாளர் தனது கடமைகளை நிறைவேற்றுவதில் தனது புறநிலை மற்றும் சுதந்திரத்தை பேணுதல் வேண்டும். எனினும், சம்பளம் தொடர்பான உறுதிச்சீட்டுக்கள், கொள்வனவு கட்டளைகள் மற்றும் முதலீட்டு அட்டவணைகள் தவிர அனைத்து உறுதிச்சீட்டுக்களையும் உள்ளக கணக்காய்வு பிரிவு சரிபார்த்து ஒப்புதல் அளிக்கிறது. 2021 யூலை 27 மற்றும் 2022 ஏப்ரல் 25 இல் தலைவரால் வெளியிடப்பட்ட உள்ளக சுற்றறிக்கைகளால் இது தொடங்கப்பட்டது. இந்தக் கடமைகள் கணக்காய்வாளர்களின் சுதந்திரத்திற்கு சவால் விடுகின்றன. | செயன்முறை இணக்கமாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு செயன்முறையை முடிப்பதற்கு முன்னர் தேவையான அனைத்து ஆவணங்களையும் முழுமையாகச் சரிபார்த்து ஒப்புதல் அளிப்பது முக்கியமானதாகும். இது அனைத்து தேவைகள் மற்றும் விதிமுறைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்கு உதவுகிறதுடன் கம்பனியின் கொள்கைகளுக்கு இணங்க செயன்முறை செயற்படுத்தப்படுகிறது. இந்த அளவிலான இணக்கத்தை பேணுவதற்கு, கம்பனி உள்ளக கணக்காய்வு மூலம் அதனது செயற்பாடுகளின் குறிப்பிட்ட பகுதிகளைத் தொடர்ந்து மதிப்பாய்வு செய்கிறது. | உள்ளக கணக்காய்வு பிரிவு நிதி மற்றும் கணக்கீட்டு செயற்பாடுகளிலிருந்து சுயாதீனமாக இருக்க வேண்டும். |

### 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41(1) ஆம் பந்தி மற்றும் அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல்களின் 4.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு இருக்க வேண்டும். மேலும், | 2022 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபையில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்பட்டதாலும், கம்பனி எதிர்கொண்ட நெருக்கடிச் சிக்கல்களாலும் நிர்ணயிக்கப்பட்ட கணக்காய்வுக் குழுக் | தொடர்புடைய சட்டங்கள் மற்றும் வழிகாட்டல்களுடன் இணங்குதல் வேண்டும். |

| | |
|---|---|
| 4.2(ஏ) வழிகாட்டலின் பிரகாரம் கணக்காய்வுக் குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட்டப்பட வேண்டும். எனினும், 2022 ஆம் ஆண்டிற்கான லிற்ரோ ரேர்மினல் லங்கா லிமிட்டட்டிற்காக கணக்காய்வுக் குழுக் கூட்டம் ஒன்றே நடாத்தப்பட்டது. | கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், 2022 ஆம் ஆண்டில் LGLL இற்காக மூன்று கூட்டங்களும் LGTLL இற்காக ஒரு கூட்டமும் நடாத்தப்பட்டன. |

**4.3**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வரிசை அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்ட தலைவர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சபையினால் நியமிக்கப்பட்டார் மேலும் அவர் 2022 ஆம் ஆண்டில் சபையினால் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார். அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களின் கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல்களின் 2.2.2 வழிகாட்டலின் பிரகாரம் தலைவர் பணிப்பாளர் சபையினின் தலைவராக உள்ளதுடன் அத்தியாயம் 2.5.1 இன் பிரகாரம் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் பொறுப்பு மூலோபாய, தந்திரோபாய மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதாகும். இந்த இரண்டு பதவிகளையும் ஒரே நபர் வைத்திருப்பது நல்லாளுகை நடைமுறைகளுக்கு எதிரானதாகும். | சிறந்த நடைமுறைகளின் பிரகாரம் தலைவர் மற்றும் CEO ஒரே தனி நபராக இருப்பதற்கு எந்த தடையும் இல்லை. திரு. எம் எஸ் ஜி பீரிஸ் அவர்கள் 2022/06/13 ஆம் திகதிய கடிதம் மூலம் அமைச்சின் செயலாளரால் சபை உறுப்பினராகவும் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். 2022/06/16 இல் நடைபெற்ற கூட்டத்தில் இரண்டு சபை உறுப்பினர்களும் திரு. எம் எஸ் ஜி பீரிஸை சபை உறுப்பினராகவும் தலைவராகவும் நியமித்தனர். அதே கூட்டத்தில் திரு. எம் எஸ் ஜி பீரிஸ் LGTLL இன் CEO ஆக நியமிக்கப்பட்டார். மேற்படி நியமனத்தின் போது நாடு கடுமையான LPG பற்றாக்குறையை எதிர்கொண்டதுடன் முழு செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடைந்திருந்தன. குறித்த காரணம் மற்றும் கிரய செயற்திறன் காரணமாக திரு. எம் எஸ் ஜி பீரிஸ் LGTLL இன் தலைவர் மற்றும் CEO ஆக நியமிக்கப்பட்டார். திரு. எம் எஸ் ஜி பீரிஸ் தலைவராகவும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராகவும் நியமிக்கப்பட்டமை ஆண்டறிக்கையில் பொருத்தமான முறையில் முன்னிலைப்படுத்தப்படும். | நல்லாளுகை நடைமுறைகளை கம்பனி பயன்படுத்த வேண்டும். |